DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். DVC.1/2025

**Complainant witness: PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கீதா | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| க/பெ. | : | கார்த்திக் கண்ணன் | வயது | : | 26 |
| ஊர் | : | நடராஜபுரம், இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>12.03.2026</u>

(எதிர்மனுதாரர் ஆஜர், எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

எனது தரப்பில் கீழக்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன்.

1) 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது **ம.சா.ஆ.1**

2) 1ம் மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார் என்பதற்கான குடும் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது **ம.சா.ஆ.2**

3) வழக்கில் கண்ட 1ம் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.12.2021ம் தேதியன்று பிறந்த குழந்தை தஷ்வின் பிறப்பு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது **ம.சா.ஆ.3**

4) கடந்த 03.11.2022ம் தேதியன்று 1ம் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் மீதும் அவரது குடும்பத்தார்கள் மீதும் இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கிய மனு ரசீது நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.12 10:53:40 +0530